## வர்த்தகமும் சுற்றுலாவும்

1989 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத் துறையின் அபிவிருத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிகச் சாதகமானதொன்றாக இருந்தது. சிஎஉ நியதிகளில் வணிக ஏற்றுமதிகளின் பெறுமதி, 1988 இன் 2 சதவீதத்திற்கும் குறைவான சிறிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 11 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. இதேவேளையில், இறக்குமதிகள் மீதான செலவு 1988 இன் அதிகரிப்பு வீதமான அதே 5 சதவீதத்தினால் அதிகரித்தது. இச் சந்தர்ப்பத்தில், 1989 இன் வர்த்தகப் பற்றாக்குறையில் 8 சதவீதக் குறைப்புக் காணப்பட்டது. இதற்கும் மேலாக, இறக்குமதிக் கொடுப்பனவுகளின் விகிதமாக ஏற்றுமதி வருவாய்கள் 1988 இன் 66 சதவீதத்திலிருந்து, 1989 இல் 70 சதவீதத்திற்குப் பாராட்டத்தக்க விதத்தில் அதிகரித்தது.

1989 இல் ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சி தேயிலை, தெங்கு, புடவைகளும் ஆடைகளும், ஏனைய கைத்தொழில் உற்பத்திகள் என்பவற்றிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் காரணமாக ஏற்பட்டதாகும். இவ் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்கள் இறப்பர், சிறு வேளாண்மை உற்பத்திகள், பெற்றோலிய உற்பத்திகள் போன்ற ஏனைய உற்பத்திகளிலிருந்தான குறைக்கப்பட்ட வருவாய்களை ஈடுசெய்வதற்குப் போதுமான அளவிற்கும் அதிகமாக இருந்தன.

### வர்த்தக நிலுவை

தற்காலிக சுங்கத் தரவுகளின்படி, 1989 இல் இறக்குமதி மீதான செலவினம் ரூ. 753,530 இலட்சமாகவும் (சிஎஉ 16,310 இலட்சம்) ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 555,110 இலட்சமாகவும் (சிஎஉ 12,020 இலட்சம்) அமைந்து ரூ. 198,420 இலட்சம் (சிஎஉ 4,290 இலட்சம்) கொண்ட வர்த்தகப் பற்றாக்குறையை ஏற்படுத்தியது. காலங்கடந்தமை, மற்றும் பதிவு செய்தலுடன் தொடர்பான ஏனைய காரணிகளுக்காகச் சுங்கத் தரவுகள் சீராக்கம் செய்யப்பட்டபொழுது, மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 561,750 இலட்சமாகவும் (சிஎஉ 12,160 இலட்சம்) இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 802,250 இலட்சமாகவும் (சிஎஉ 17,370 இலட்சம்) அமைந்தன. இதன்படி, சீராக்கப்பட்ட தரவு முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான ரூ. 241,020 இலட்சத்தை (சிஎஉ 5,640 இலட்சம்) விட 8 சதவீதம் குறைவாக ரூ. 240,500 இலட்ச வர்த்தகப் பற்றாக்குறையை (சிஎஉ 5,210 இலட்சம்) பிரதிபலித்தது.

1989 இல் தேயிலை தவிர்ந்த பிரதான ஏற்றுமதிகளின் சராசரி விலைகள் முன்னைய ஆண்டைவிடக் குறைந்தளவு சாதகமாகவே இருந்தன. இதற்கு மாறாக அரிசி, சீனி, கோதுமை, பெற்றோலியம், வளமாக்கி போன்ற எல்லா முக்கிய இறக்குமதிகளின் விலைகள் 1988 ஐவிட கூடியளவில் அதிகரித்தன. இதன் விளைவாக, வர்த்தக மாற்று விகிதம் 1989 இல் 6 சதவீதத்தால் தேய்வடைந்தது. இது முன்னைய ஆண்டின் 7 சதவீத வர்த்தக மாற்று விகிதத் தேய்வை விடச் சிறந்து விளங்கியது.

## ஏற்றுமதிகள்

1989 இல் ஏற்றுமதி வளர்ச்சி, கைத்தொழில் ஏற்றுமதிகளின் 16 சதவீத அதிகரிப்பிலும், வேளாண்மை ஏற்றுமதிகளின் 2 சதவீத அதிகரிப்பிலும் முழுமையாகப் பிரதிபலிக்கப்பட்டது. இதற்கு மாறாக, கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பெறுமதி 1989 இல் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் ஏற்றுமதியின் 16 சதவீத வளர்ச்சி 1988 இல் பதிவு செய்யப்பட்ட 1 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்தமையுடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்க சாதனையாக விளங்கியது.

இவ் அபிவிருத்திகளுடன் 1977 இன் பொருளாதார சீரமைப்பினைத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பிரதிபலித்த ஏற்றுமதி உள்ளமைப்பு 1989 இல் மேலும் மாற்றங்களைக் காட்டியது. இவற்றில் மிகவும் குறிப்பிடத்தக்கது யாதெனில், 1988 இற்கும் 1989 இற்கும் இடையில் கைத்தொழில்

### அட்டவணை 1.38

### ஏற்றுமதிகள், இறக்குமதிகள், வர்த்தக நிலுவை 1978—1989

பத்து இலட்சம் ரூபாய்களில் (சிஎஉ பத்து இலட்சம் அடைப்புக் குறிக்குள்)

| ஆண்டு | சுங்கத் தரவு | | | சீராக்கப்பட்ட தரவு | | |
|---|---|---|---|---|---|---|
| | ஏற்றுமதிகள் க.ஏ.பெ. (அ) | இறக்குமதிகள் கொ.கா.க. (ஆ) | வர்த்தக நிலுவை | ஏற்றுமதிகள் | இறக்குமதிகள் | வர்த்தக நிலுவை |
| 1978 ... | 13,206 | 14,687 | — 1.480 | 13,193 | 15,100 | — 1,907 |
| | (674) | (750) | (—76) | (674) | (771) | (—97) |
| 1979 ... | 15,286 | 22,560 | — 7,275 | 15,282 | 22,603 | — 7,321 |
| | (760) | (1,121) | (—361) | (759) | (1,123) | (—364) |
| 1980 ... | 17,388 | 33,637 | — 16,249 | 17,595 | 33,942 | — 16,347 |
| | (808) | (1,563) | (—755) | (818) | (1,577) | (—760) |
| 1981 ... | 20,199 | 35,530 | — 15,331 | 21,043 | 36,583 | — 15,540 |
| | (891) | (1,567) | (—676) | (928) | (1,614) | (—686) |
| 1982 ... | 21,124 | 36,876 | — 15,751 | 21,454 | 41,946 | — 20,492 |
| | (919) | (1,605) | (—686) | (934) | (1,826) | (—892) |
| 1983 ... | 25,183 | 42,021 | — 16,838 | 25,096 | 45,558 | — 20,461 |
| | (1,001) | (1,670) | (—669) | (998) | (1,811) | (—813) |
| 1984 ... | 37,006 | 46,913 | — 9,908 | 37,347 | 47,541 | — 10,194 |
| | (1,419) | (1,799) | (—380) | (1,432) | (1,823) | (—391) |
| 1985 ... | 35,035 | 49,069 | — 14,034 | 36,207 | 54,049 | — 17,843 |
| | (1,268) | (1,776) | (—508) | (1,311) | (1,956) | (—646) |
| 1986 ... | 34,092 | 51,282 | — 17,189 | 34,072 | 54,559 | — 20,487 |
| | (1,036) | (1,559) | (—523) | (1,036) | (1,658) | (— 623) |
| 1987 (இ) ... | 39,861 | 59,750 | — 19,889 | 41,133 | 60,528 | — 19,396 |
| | (1,046) | (1,568) | (—522) | (1,080) | (1,589) | (—509) |
| 1988 ... | 47,092 | 70,320 | — 23,228 | 46,928 | 71,030 | — 24,102 |
| | (1,101) | (1,645) | (—543) | (1,098) | (1,661) | (—564 |
| 1989 ... | 55,511 | 75,353 | — 19,842 | 56,175 | 80,225 | — 24,050) |
| | (1,202) | (1,631) | (—430) | (1,216) | (1,731) | (—521) |

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) மீன் ஏற்றுமதியின் பெறுமதியும் உட்பட.
(ஆ) தங்கக் கட்டிகளும் நாணயங்களும் நீங்கலாக. மாற்றம் 1988—1 சிஎஉ=ரூ. 42,7577
(இ) மீளாய்வு செய்யப்பட்டது. 1989—1 சிஎஉ=ரூ. 46,1874

ஏற்றுமதிகளின் பங்கு 48 சதவீதத்திலிருந்து 51 சதவீதத்திற்கு அதிகரித்ததும், இதன் விளைவாக வேளாண்மை ஏற்றுமதிகள் 43 சதவீதத்திலிருந்து 39 சத வீதத்திற்கு வீழ்ச்சி அடைந்ததும் ஆகும். கனிப்பொருள் ஏற்றுமதிகளின் பங்கும் 5.6 சதவீதத்திலிருந்து 4.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. புடவைகளும் ஆடைகளும் தொடர்ந்தும் ஏற்றுமதிகளில் முக்கிய வகையாக விளங்கி 1988 இன் 30 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் மொத்த ஏற்றுமதிகளில் 31 சத வீதத்திற்கு வகை கூறியது. இதேவேளையில் மொத்த ஏற்றுமதிகளில் பெருந் தோட்டப் பயிர்களின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 37 சதவீதத்தி லிருந்து 35 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

### தேயிலை

தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1988 இன் சிஎஉ 2,880 இலட்சத்தி லிருந்து (ரூ. 122,990 இலட்சம்) 1989 இல் சிஎஉ 2,960 இலட்சத்திற்கு (ரூ. 136,640 இலட்சம்) 3 சதவீதத்தால் அதிகரித்தது. இது முழுமையாக கிலோக்கிறாமிற்கான விலை கிலோக்கிறாமொன்றிற்கு சிஎஉ 1.31 இலிருந்து (ரூ. 55.95) கிலோக்கிறாமொன்றுக்கு சிஎஉ 1.45 இற்கு (ரூ. 66.91) 11 சத வீதத்தால் அதிகரித்ததால் ஏற்பட்டதாகும். இதற்கு மாறாக, ஏற்றுமதிகளின் அளவு 2,200 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 2,040 இலட்சம் கிலோக் கிறாம்களுக்கு 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டுச் சந்தைகளின் சாதகமான போக்கினைப் பிரதிபலிப்பதாய் கொழும்பு ஏலங்களின் தேயிலையின் சராசரி விலை கிலோக்கிறாமிற்கு ரூ. 42.77 இலிருந்து கிலோக்கிறாமிற்கு ரூ. 54.61 இற்கு 28 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலையின் விலை 1988 இற்கும் 1989 இற்கும் இடையில் கிலோக் கிறாமிற்கு 99.30 பென்சிலிருந்து கிலோக்கிறாமிற்கு 125.64 பென்சிற்கு 27 சத வீதத்தால் அதிகரித்தது.

### இறப்பர்

இறப்பர் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ஏற்றுமதிகளின் அளவிலும் விலையிலும் ஏற்பட்ட வீழ்ச்சிகள் காரணமாக 1988 இன் சிஎஉ 870 இலட்சத்தி லிருந்து (ரூ. 37,060இலட்சம்) 1989 இல் சிஎஉ 670 இலட்சத்திற்கு (ரூ.31,120 இலட்சம்) 23 சதவீதத்தால் மிகக் கூடியளவில் வீழ்ச்சியடைந்தது. அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி 990 இலட்சம் கிலோக்கிறாம்களிலிருந்து 860 இலட்சம் கிலோக்கிறாம்களுக்கு 13 சதவீதமாக விளங்குகையில் விலை வீழ்ச்சி கிலோக் கிறாமிற்கு சிஎஉ 0.87 இலிருந்து (ரூ. 37.33) கிலோக்கிறாமிற்கு சிஎஉ 0.78 இற்கு (ரூ. 36.17) 10 சதவீதமாக விளங்கியது. இறப்பரிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்களில் தட்டை இறப்பர் 46 சதவீதத்திற்கு வகைகூறியவேளை யில் லேற்றெக்ஸ் கிறேப், கட்டி இறப்பர் என்பன முறையே 33 சதவீதத்திற்கும், 15 சதவீதத்திற்கும் வகைகூறின.

### தெங்கு

தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1988 இன் சிஎஉ 360 இலட்சத்திலிருந்து (ரூ. 15,380 இலட்சம்) 1989 இல் சிஎஉ 620 இலட்சத் திற்கு (ரூ. 28,650 இலட்சம்) 72 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித் தன. இது ஏற்றுமதிகளின் அளவு 2,240 இலட்சம் காய்களிலிருந்து 5,720

இலட்சம் காய்களுக்கு இரு மடங்கிற்கும் மேல் அதிகரித்ததால் முற்றாக ஏற்பட்ட விளைவாகும். தெங்கு துணை உற்பத்திகளின் ஏற்றுமதிகளின் பெறுமதியும் சிஎஉ 150 இலட்சத்திலிருந்து சிஎஉ 200 இலட்சத்திற்கு 33 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் சராசரி ஏற்றுமதி விலை காயொன்றிற்கு 1988 இன் சிஎஉ 0.09 இலிருந்து (ரூ. 4.00) 1989 இல் காயொன்றிற்கு சிஎஉ 0.07 இற்கு (ரூ. 3.35) 22 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வரவுகளில், உள்ளீட்டு உற்பத்திகள் 67 சதவீதத்திற்கு வகைகூறுகையில் எஞ்சிய 33 சதவீதம் தெங்கு துணை உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதிகளைப் பிரதிபலித்தன.

**சிறு வேளாண்மை உற்பத்திகள்**

1989 இல் சிறு வேளாண்மை உற்பத்திகளிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் 1988 இன் சிஎஉ 600 இலட்சத்திலிருந்து (ரூ. 25,610 இலட்சம்) சிஎஉ 520 இலட்சத்திற்கு (ரூ. 24,080 இலட்சம்) 13 சதவீதத்தால் பெருமளவில் வீழ்ச்சியடைந்தன. இது 1988 இல் பதிவு செய்யப்பட்ட 33 சதவீத குறிப்பிடத்தக்க முன்னேற்றத்துடன் ஒப்பிடுகையில் ஏமாற்றமிக்க விடயமாகக் காணப்பட்டது. இவ்வீழ்ச்சி முக்கியமாகக் கராம்பு, மிளகு, கோப்பி, காய்கறிகள், எள்ளு என்பவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பினால் ஏற்பட்டதாகும். இவ்வீழ்ச்சி கறுவா, தயாரிக்கப்படாத புகையிலை, மர முந்திரிப் பருப்புகள் போன்ற ஏனைய உற்பத்திகளிலான குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைவிடக் கூடுதலாக விளங்கியமையே இவ்வேமாற்றம் தரும் வீழ்ச்சிக்குக் காரணமாகும். மொத்த சிறு வேளாண்மை ஏற்றுமதிகளில் கறுவா மட்டும் 44 சதவீதத்திற்கு வகை கூறியது.

**கைத்தொழில் ஏற்றுமதிகள்**

1989 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி, 1988 இன் சிஎஉ 5,300 இலட்சத்திலிருந்து (ரூ. 226,740 இலட்சம்) சிஎஉ 6,160 இலட்சத்திற்கு (ரூ. 284,700 இலட்சம்) 16 சதவீதத்தால் கணிசமான அளவில் அதிகரித்தது. கைத்தொழில் ஏற்றுமதிகளின் உயர்ந்த வளர்ச்சி முக்கியமாகப் புடவைகளும் ஆடைகளும், வைரங்கள், இரசாயனங்கள், இறப்பர் உற்பத்திகள் போன்ற ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான அதிகரித்த வருவாய்களால் ஏற்பட்டதாகும். ஆடை ஏற்றுமதிகளின் பெறுமதி சிஎஉ 3,330 இலட்சத்திலிருந்து சிஎஉ 3,820 இலட்சத்திற்கு 14 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில் ஏனைய கைத்தொழில் உற்பத்திகளின் பெறுமதி சிஎஉ 1,440 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,860 இலட்சத்திற்கு 29 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும், ஏற்றுமதிகளின் அளவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாகப் பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் சிஎஉ 530 இலட்சத்திலிருந்து சிஎஉ 490 இலட்சத்திற்கு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

**கனிப்பொருள் ஏற்றுமதிகள்**

1989 இல் கனிப்பொருள் ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 1988 இன் சிஎஉ 610 இலட்சங்களுடன் (ரூ. 26,140 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 580 இலட்சமாக (ரூ. 26,930 இலட்சம்) விளங்கி ரூபா நியதிகளில் 3 சதவீத அதிகரிப்பைக் காட்டியபோதிலும் சிஎஉ நியதிகளில் 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வீழ்ச்சி இரத்தினக் கற்களிலும், ஏனைய கனிப்பொருள்

# அட்டவணை 1.39

## ஏற்றுமதிகளின் அமைப்பு 1985—1989

| வகை | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | மொத்தத்தின் சதவீதம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
| 1. வேளாண்மை உற்பத்திகளின் ஏற்றுமதி ... | 19,026 | 15,764 | 17,437 | 20,104 | 22,049 | 688.7 | 479.2 | 457.6 | 470.2 | 477.4 | 52.5 | 46.3 | 42.4 | 42.8 | 39.2 |
| 1.1. தேயிலை ... | 12,003 | 9,253 | 10,654 | 12,299 | 13,664 | 434.5 | 281.2 | 279.6 | 287.6 | 295.8 | 33.1 | 27.2 | 25.9 | 26.2 | 24.3 |
| 1.2. இறப்பர் ... | 2,566 | 2,622 | 2,923 | 3,706 | 3,112 | 92.9 | 79.7 | 76.9 | 86.7 | 67.4 | 7.1 | 7.7 | 7.1 | 7.9 | 5.5 |
| 1.3. தெங்கு ... | 3,093 | 2,389 | 2,140 | 1,538 | 2,865 | 111.9 | 72.6 | 56.1 | 36.0 | 62.0 | 8.5 | 7.0 | 5.2 | 3.3 | 5.1 |
| 1.3.1 உள்ளீட்டு உற்பத்திகள் | 2,383 | 1,609 | 1,423 | 895 | 1,920 | 86.3 | 48.9 | 37.3 | 20.9 | 41.6 | 6.6 | 4.7 | 3.5 | 1.9 | 3.4 |
| 1.3.2 ஏனையவை ... | 710 | 780 | 717 | 643 | 945 | 25.7 | 23.7 | 18.8 | 15.0 | 20.4 | 2.0 | 2.3 | 1.7 | 1.4 | 1.7 |
| 1.4 சிறுவேளாண்மைப் பயிர்கள் (அ) | 1,365 | 1,500 | 1,714 | 2,561 | 2,408 | 49.4 | 45.6 | 45.0 | 59.9 | 52.1 | 3.8 | 4.4 | 4.2 | 5.4 | 4.3 |
| 2. கைத்தொழில் உற்பத்திகளின் ஏற்றுமதி (அ) (ஆ) ... | 14,295 | 15,878 | 20,004 | 22,674 | 28,470 | 517.4 | 482.6 | 525.0 | 530.3 | 616.4 | 39.5 | 46.6 | 48.6 | 48.3 | 50.7 |
| 2.1 புடவைகளும் ஆடைகளும்... | 7,960 | 9,629 | 12,897 | 14,260 | 17,631 | 288.1 | 292.7 | 338.5 | 333.5 | 381.8 | 22.0 | 28.3 | 31.3 | 30.4 | 31.4 |
| 2.2 பெற்றோலிய உற்பத்திகள் | 3,877 | 2,358 | 2,592 | 2,265 | 2,242 | 140.3 | 71.7 | 68.0 | 53.0 | 48.5 | 10.7 | 6.9 | 6.3 | 4.8 | 4.0 |
| 2.3 ஏனையவை ... | 2,459 | 3,891 | 4,515 | 6,148 | 8,597 | 89.0 | 118.3 | 118.5 | 143.8 | 186.0 | 6.8 | 11.4 | 11.0 | 13.1 | 15.3 |
| 3. கனிப்பொருள் ஏற்றுமதி ... | 864 | 1,182 | 1,805 | 2,614 | 2,093 | 31.3 | 35.9 | 47.4 | 61.1 | 58.3 | 2.4 | 3.5 | 4.4 | 5.6 | 4.8 |
| 3.1 இரத்தினக் கற்கள் ... | 561 | 755 | 1,447 | 2,070 | 2,204 | 20.3 | 23.0 | 38.0 | 48.4 | 47.7 | 1.6 | 2.2 | 3.5 | 4.4 | 3.9 |
| 3.2 ஏனையவை ... | 303 | 427 | 358 | 543 | 489 | 11.0 | 13.0 | 9.4 | 12.7 | 10.6 | 0.8 | 1.3 | 0.9 | 1.2 | 0.9 |
| 4. வகைப்படுத்தப்படாதவை (இ) ... | 2,021(ஈ) | 1,249 | 1,886(ஈ) | 1,536 | 2,963(ஈ) | 73.2 | 38.0 | 49.5 | 35.9 | 64.2 | 5.6 | 3.7 | 4.6 | 3.3 | 5.3 |
| மொத்த ஏற்றுமதிகள் (ஆ) ... | 36,207 | 34,072 | 41,133 | 46,928 | 56,175 | 1,310.5 | 1,035.7 | 1,079.5 | 1,097.5 | 1,216.2 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள்
(ஆ) சீராக்கப்பட்டது
(இ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(ஈ) வான்கலமொன்றின் ஏற்றுமதியையும் உள்ளடக்குகிறது.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட எயர் லங்கா
இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.40

## தேயிலை ஏற்றுமதிகள்—அளவும் பெறுமதியும்

| விடயம் | 1987 அளவு கிலோகிராம்கள் | 1987 பெறுமதி ரூபா | 1988 அளவு கிலோகிராம்கள் | 1988 பெறுமதி ரூபா | 1989 அளவு கிலோகிராம்கள் | 1989 பெறுமதி ரூபா |
|---|---|---|---|---|---|---|
| மொத்த அளவு கருந்தேயிலை ... | 120,192,375 | 6,019,512,204 | 139,719,567 | 7,490,167,125 | 128,600,505 | 8,255,012,252 |
| உறைகளில் அடைக்கப்பட்ட கருந்தேயிலை ... | 77,643,620 | 4,289,147,021 | 75,790,050 | 4,339,696,588 | 72,400,140 | 4,902,536,443 |
| பொதிகளிலடைக்கப்பட்ட கருந்தேயிலை ... | 2,424,597 | 253,013,494 | 3,309,093 | 376,042,921 | 2,709,818 | 397,462,075 |
| உடன் தேயிலை ... | 345,911 | 59,816,745 | 199,824 | 38,265,586 | 436,060 | 103,411,282 |
| கொழுந்துத் தேயிலை ... | — | — | 750,990 | 52,591,752 | 21,257 | 1,937,654 |
| எனையவை ... | 513,642 | 31,976,378 | 53,019 | 1,936,650 | 32,426 | 3,513,970 |
| மொத்தம் | 201,120,145 | 10,653,466,202 | 219,822,543 | 12,298,700,622 | 204,200,206 | 13,663,873,676 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

ஏற்றுமதிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகள் சிஎஉ 484 இலட்சங்களிலிருந்து (ரூ. 20,700 இலட்சம்) சிஎஉ 477 இலட்சத்திற்கு (ரூ. 22,040 இலட்சம்) 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில் ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் சிஎஉ 130 இலட்சத்திலிருந்து சிஎஉ 110 இலட்சத்திற்கு 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இரத்தினக்கற்களின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி 1988, 1989 இற்கிடையில் அதன் விலை கரட் ஒன்றிற்கு சிஎஉ 3.1 இலிருந்து சிஎஉ 2.8 இற்கு 10 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததால் ஏற்பட்டதாகும். எனினும், ஏற்றுமதி அளவு இக்காலப் பகுதிக்கிடையில் 156 இலட்சம் கரட்டிலிருந்து 171 இலட்சம் கரட்டிற்கு அதிகரித்தது. இரத்தினக்கற்களுக்கான முதன்மை ஏற்றுமதிச் சந்தைகளாக, யப்பான், தாய்லாந்து, ஐக்கிய அமெரிக்க நாடுகள், கொங்கொங் என்பன விளங்கின.

## இறக்குமதிகள்

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, 1989 இல் இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவு 1988 இன் சிஎஉ 16,610 இலட்சத்துடன் (ரூ. 710,300 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 17,370 இலட்சமாக (ரூ. 802,250 இலட்சம்) விளங்கி 5 சதவீத அதிகரிப்பைக் காட்டின. இவ் அதிகரிப்பானது முழுமையாக நுகர்வு, இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் பிரதிபலிக்கப்பட்டது. இதற்கு மாறாக 1989 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்வபிவிருத்திகளுடன் இறக்குமதிகளின் உள்ளடக்கம் 1989 இல் மேலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. 1988 இற்கும், 1989 இற்கும் இடையில் மிகவும் குறிப்பிடத்தக்க மாற்றம் என்னவெனில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 25 சதவீதத்திலிருந்து 26 சதவீதத்திற்கு அதிகரித்தமையும் முதலீட்டுப் பொருட்களின் பங்கு 17 சதவீதத்திலிருந்து 15 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமையுமாகும். இதேவேளையில் இடைநிலைப் பொருட்களின் பங்கு கிட்டத்தட்ட முன்னைய ஆண்டின் அதே மட்டமான 57 சதவீதத்திலேயே இருந்தது.

### நுகர்வுப் பொருட்கள்

1989 இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு அரிசி, சீனி இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவு காரணமாக 1988 இன் சிஎஉ 4,080 இலட்சத்திலிருந்து (ரூ. 174,330 இலட்சம்) சிஎஉ 4,540 இலட்சத்திற்கு (ரூ. 209,620 இலட்சம்) 11 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்தது. அரிசி இறக்குமதிகளின் செலவு அதன் அளவு 210,000 மெற்றிக் தொன்களிலிருந்து 316,000 மெற்றிக் தொன்களுக்கு 50 சதவீதத்தால் அதிகரித்ததாலும், அதன் மெற்றிக் தொன்னிற்கான விலை சிஎஉ 201 இலிருந்து (ரூ. 8,593) சிஎஉ 233 இற்கு (ரூ. 10,749) 16 சதவீதத்தால் அதிகரித்ததாலும் சிஎஉ 420 இலட்சத்திலிருந்து சிஎஉ 740 இலட்சத்திற்கு 74 சதவீதத்தால் அதிகரித்தது. இறக்குமதிகளின் அளவு 1988 இன் அதே மட்டத்திலேயே தொடர்ந்து விளங்கியதுடன் சீனி இறக்குமதிகள் மீதான செலவு, அதன் விலையில் ஏற்பட்ட 33 சதவீத அதிகரிப்புக் காரணமாக, சிஎஉ 680 இலட்சத்திலிருந்து சிஎஉ 940 இலட்சத்திற்கு 37 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்தது. இதேவேளையில் ஏனைய நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி கிட்டத்தட்ட முன்னைய ஆண்டின் மட்டமான சிஎஉ 1,690 இலட்சத்திலேயே தொடர்ந்தும் விளங்கியது.

**இடைநிலைப் பொருட்கள்**

1989 இல் இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு, 1988 இன் சிஎஉ 9,430 இலட்சத்துடன் (ரூ. 403,250 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 9,800 இலட்சமாக (ரூ. 452,550 இலட்சம்) விளங்கி 4 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது கோதுமைத் தானியம், புடவைகளும் ஆடைகளும் என்பவற்றின் இறக்குமதிகள் மீதான அதிகரித்த செலவால் பெருமளவில் ஏற்பட்டதாகும். கோதுமைத் தானியத்தின் இறக்குமதிப் பெறுமதி, இறக்குமதி அளவிலும் விலையிலும் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக் காரணமாக சிஎஉ 660 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,080 இலட்சத்திற்கு 64 சதவீதத்தால் பெருமளவில் அதிகரித்தது. கோதுமைத் தானியத்தின் இறக்குமதி அளவு 612,000 மெற்றிக் தொன்களிலிருந்து 726,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்திருக்கையில் அதன் சராசரி இறக்குமதி விலை மெற்றிக் தொன் ஒன்றிற்கு சிஎஉ 107 இலிருந்து சிஎஉ 148 இற்கு அதிகரித்தது. இதேவேளையில், புடவைகளினதும் ஆடைகளினதும் இறக்குமதிப் பெறுமதி சிஎஉ 2,060 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,160 இலட்சத்திற்கு 5 சதவீதத்தால் அதிகரித்தது.

எனினும், இவ்வதிகரிப்புக்கள் 1989 இல் பெற்றோலியம், வளமாக்கி என்பவற்றின் இறக்குமதிகள் மீதான செலவில் ஏற்பட்ட குறைப்பினால் கூடிய அளவிற்கு எதிரீடு செய்யப்பட்டன. 1989 இல் மசகெண்ணெய் இறக்குமதிகளின் அளவு 1988 இன் 140 இலட்சம் பீப்பாய்களிலிருந்து 1989 இல் 90 இலட்சம் பீப்பாய்களுக்கு வீழ்ச்சியடைந்தமையால், பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ 1,830 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,810 இலட்சத்திற்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு முற்றிலும் காரணமாகும். இதைப்போலவே வளமாக்கி இறக்குமதிகளின் அளவு 556,000 மெற்றிக் தொன்களிலிருந்து, 355,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தமையே இறக்குமதிகள் மீதான அவற்றின் செலவு சிஎஉ 580 இலட்சத்திலிருந்து சிஎஉ 380 இலட்சத்திற்கு 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைய முற்றும் காரணமாகும். வளமாக்கியின் இறக்குமதி விலை 1989 இல் 2 சதவீதத்தால் அதிகரித்தது.

**முதலீட்டுப் பொருட்கள்**

1989 இல் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் மீதான செலவு 1988 இன் சிஎஉ 2,830 இலட்சத்திலிருந்து (ரூ. 120,810 இலட்சம்) சிஎஉ 2,600 இலட்சத்திற்கு (ரூ. 120,180 இலட்சம்) மேலும் 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சி, பொறி, கருவி என்பவற்றின் இறக்குமதியில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டு சிஎஉ 1,650 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,360 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் போக்குவரத்துக் கருவிகளின் பெறுமதி இவ்விரு ஆண்டுகட்கிடையில் சிஎஉ 330 இலட்சத்திலிருந்து சிஎஉ 400 இலட்சத்திற்கு 21 சதவீதத்தினால் அதிகரித்தது.

**வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை**

1977 இல் தொடங்கப்பட்ட தாராளமயப்படுத்தப்பட்ட வர்த்தகக் கொள்கைகளை இலங்கை தொடர்ந்தும் பேணியதுடன், 1989 இல் தீர்வை அமைப்பிலும் இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளிலும் சில திருத்தங்களை மேற்கொண்டதன் மூலம் அதனை விரிவாக்கியது.

அட்டவணை 1.41

## இறக்குமதிகளின் முடிவுப் பயன்பாட்டுப் பகுப்பு 1987—1989

| வகை | | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி சி.எஉ. பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதியின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1987 | 1988(அ) | 1989(ஆ) | 1987 | 1988 | 1989 | 1987 | 1988 | 1989 |
| 1. நுகர்வுப் பொருட்கள் | ... | 13,814 | 17,438 | 20,962 | 362.5 | 407.8 | 453.8 | 22.8 | 24.5 | 26.1 |
| 1.1 உணவும் குடிபானமும் | ... | 7,462 | 10,214 | 13,136 | 195.8 | 238.9 | 284.4 | 12.3 | 14.4 | 16.4 |
| 1.1.1 அரிசி | ... | 687 | 1,808 | 3,396 | 18.0 | 42.3 | 73.5 | 1.1 | 2.6 | 4.2 |
| 1.1.2 மா | ... | 96 | 303 | 175 | 2.5 | 7.1 | 3.8 | 0.2 | 0.4 | 0.2 |
| 1.1.3 சீனி | ... | 2,389 | 2,927 | 4,326 | 62.7 | 68.5 | 93.7 | 3.9 | 4.1 | 5.4 |
| 1.2 ஏனையவை | ... | 6,353 | 7,225 | 7,826 | 166.7 | 169.0 | 169.4 | 10.5 | 10.2 | 9.8 |
| 2. இடைநிலைப் பொருட்கள் (ஈ) | ... | 34,619 | 40,325 | 45,255 | 903.6 | 943.1 | 979.8 | 57.2 | 56.8 | 56.4 |
| 2.1 பெற்றோலியம் | ... | 8,716 | 7,839 | 8,376 | 228.7 | 183.3 | 181.3 | 14.4 | 11.0 | 10.4 |
| 2.2 வளமாக்கி | ... | 1,299 | 2,476 | 1,755 | 34.1 | 57.9 | 138.0 | 2.1 | 3.5 | 2.2 |
| 2.3 இரசாயனம் | ... | 1,559 | 1,887 | 2,117 | 40.9 | 44.1 | 45.8 | 2.6 | 2.6 | 2.6 |
| 2.4 கோதுமை | ... | 1,923 | 2,800 | 4,964 | 50.5 | 65.5 | 107.5 | 3.2 | 3.9 | 6.2 |
| 2.5 புடவைகளும் ஆடையும் (ஈ) | ... | 8,086 | 8,796 | 9,981 | 212.2 | 205.7 | 216.1 | 13.4 | 12.4 | 12.4 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | ... | 11,334 | 12,081 | 12,018 | 297.5 | 282.5 | 260.2 | 18.7 | 17.0 | 15.0 |
| 3.1 பொறியும் கருவியும் | ... | 6,640 | 7,047 | 6,278 | 174.3 | 164.8 | 135.9 | 11.0 | 9.9 | 7.8 |
| 3.2 போக்குவரத்துக் கருவி | ... | 1,418 | 1,409 | 1,833 | 37.2 | 32.9 | 39.7 | 2.3 | 2.0 | 2.3 |
| 3.3 கட்டடப் பொருட்கள் | ... | 710 | 1,038 | 991 | 18.6 | 24.3 | 21.5 | 1.2 | 1.5 | 1.2 |
| 4. பகுக்கப்படாதவை | ... | 761 | 1,186 | 1,990 | 20.0 | 27.7 | 43.1 | 1.3 | 1.7 | 2.5 |
| மொத்த இறக்குமதிகள் (இ) | ... | 60,528 | 71,030 | 80,225 | 1,588.6 | 1,661.2 | 1,736.9 | 100.0 | 100.0 | 100.0 |

(அ) திருத்தப்பட்டவை.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) சீராக்கப்பட்டது.
(ஈ) முன்னர் நுகர்வுப் பொருட்களாகப் பாகுபடுத்தப்பட்ட புடவை ஆடைகளின் இறக்குமதிகள் தற்பொழுது இடைநிலைப்பொருட்களாகப் பாகுபடுத்தப்படுகின்றன.

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்,
உணவு ஆணையாளர் திணைக்களம்,
இலங்கை வளமாக்கிக் கூட்டுத்தாபனமும்
ஏனைய முதன்மை வளமாக்கி இறக்குமதியாளர்களும்,
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.42

## முக்கிய பண்டங்களின் இறக்குமதிகள் 1983—1989

| விடயம் | உணவு ஆணையாளர் கூ.மொ.வி. நிலையம், பெ.கூ. தாபனம் என்பனவற்றின் தரவு | | | | | | | சுங்கத் தரவு (அ) | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989(ஆ) | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989(இ) |
| **அரிசி** | | | | | | | | | | | | | | |
| அளவு—ஆயிரம் மெற்றிக் தொன்களில் ... | 123 | 26 | 182 | 220 | 102 | 189 | 291 | 147 | 38 | 211 | 231 | 113 | 210 | 316 |
| பெறுமதி—ரூ. பத்து இலட்சங்களில் ... | 605 | 129 | 932 | 1,000 | 608 | 1,608 | 3,155 | 765 | 197 | 1,089 | 1,052 | 687 | 1,808 | 3,396 |
| கொ.க. விலை ரூ./ மெ. தொன்னொன்றுக்கு ... | 4,912 | 4,876 | 5,111 | 4,536 | 5,932 | 8,526 | 10,824 | 5,204 | 5,124 | 5,153 | 4,554 | 6,086 | 8,593 | 10,749 |
| **கோதுமை** | | | | | | | | | | | | | | |
| அளவு—ஆயிரம் மெற்றிக் தொன்களில் ... | 579 | 571 | 665 | 681 | 578 | 612 | 726 | 579 | 571 | 665 | 681 | 578 | 612 | 726 |
| பெறுமதி—ரூ. பத்து இலட்சங்களில் ... | 2,340 | 2,471 | 2,765 | 2,371 | 1,923 | 2,800 | 4,964 | 2,340 | 2,471 | 2,765 | 2,371 | 1,923 | 2,800 | 4,964 |
| கொ. க. விலை ரூ./ மெ. தொன்னொன்றுக்கு ... | 4,044 | 4,325 | 4,157 | 3,481 | 3,330 | 4,574 | 6,837 | 4,044 | 4,325 | 4,157 | 3,481 | 3,330 | 4,574 | 6,837 |
| **சீனி** | | | | | | | | | | | | | | |
| அளவு—ஆயிரம் மெற்றிக் தொன்களில் ... | 170 | 96 | 161 | 102 | 60 | — | 117 | 315 | 263 | 388 | 322 | 376 | 319 | 320 |
| பெறுமதி—ரூ. பத்து இலட்சங்களில் ... | 987 | 470 | 823 | 580 | 373 | — | 1,697 | 1,984 | 1,346 | 1,985 | 1,764 | 2,389 | 2,927 | 4,326 |
| கொ. க. விலை ரூ./ மெ. தொன்னொன்றுக்கு ... | 5,793 | 4,917 | 5,103 | 5,676 | 6,209 | — | 14,536 | 6,301 | 5,112 | 5,122 | 5,480 | 6,348 | 9,177 | 13,507 |
| **மசகெண்ணெய்** | | | | | | | | | | | | | | |
| அளவு—ஆயிரம் மெற்றிக் தொன்களில் ... | 11 | 13 | 12 | 12 | 13 | 14 | 9 | 11 | 13 | 12 | 12 | 13 | 14 | 9 |
| பெறுமதி—ரூ. பத்து இலட்சங்களில் ... | 7,832 | 9,542 | 9,486 | 5,296 | 7,121 | 6,726 | 5,896 | 7,832 | 9,542 | 9,486 | 5,296 | 7,121 | 6,726 | 5,896 |
| கொ. க. விலை ரூ./ மெ. தொன்னொன்றுக்கு ... | 714 | 751 | 777 | 439 | 544 | 484 | 628 | 714 | 751 | 777 | 439 | 544 | 484 | 628 |
| **மொத்தப் பெறுமதி—** ப. இ. ரூபாய்களில் ... | 11,764 | 12,612 | 14,006 | 9,247 | 10,025 | 11,134 | 15,712 | 12,921 | 13,556 | 15,325 | 10,483 | 12,120 | 14,261 | 18,582 |

(அ) சீராக்கப்பட்ட தரவு.
(ஆ) அரிசி, கோதுமை, சீனி என்பனவற்றின் இறக்குமதி தொடர்பாக 1989 யூலை தொடக்கம் கூ.மொ.வி. நிலையத்தின் தரவுகள் உள்ளடக்கப்பட்டன.
(இ) தற்காலிகமானவை

மூலங்கள் : உணவு ஆணையாளர் திணைக்களம்.
இலங்கைச் சுங்கம்.
இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,
கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம்.
இலங்கை மத்திய வங்கி.

**தீர்வை**

1989 இல் ஏற்றுமதிகள் மீதான தீர்வைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் இருக்கவில்லை. 1988 நவெம்பரில் திருத்தப்பட்ட தேயிலை மீதான ஏற்றுமதித் தீர்வை மீளாய்விற்குரிய ஆண்டில் மாற்றமுறாது தொடர்ந்திருந்தது. இதன்படி, தொகை வடிவிலான தேயிலை, உறைகளிலடைக்கப்பட்ட தேயிலை, உடன் தேயிலை, தேயிலைப் பொதிகள், ஏனைய எல்லாத் தேயிலைகள் என்பவற்றிற்குரிய தீர்வை வீதங்கள் முறையே கிலோக்கிறாமிற்கு ரூ. 1.50, ரூ. 1.00, ரூ. 6.50, ரூ. 0.50, ரூ. 3.50 ஆகத் தொடர்ந்தும் மாறாதிருந்தன. எனினும், பெறுமான விகித விற்பனை வரியின் கணிப்பிற்கான தேயிலையின் கீழ்மட்ட விலை, இவ்வாண்டில் மூன்று முறை திருத்தப்பட்டது. 1989 பெப்புருவரியில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது திருத்தத்தில் வரிக்குரிய விலை மட்டம் கிலோக் கிறாமிற்கு ரூ. 44 இலிருந்து ரூ. 48 இற்கு உயர்த்தப்பட்டு, வரிக்குரிய மட்டத்திற்கு மேல் 50 சதவீத வரி கிலோக்கிறாமிற்கு ரூ. 10 இற்குக் கூடாதவாறு விதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1989 ஓகத்தில் மேற்கொள்ளப்பட்ட இரண்டாவது திருத்தத்தில் பெறுமான விகித விற்பனை வரியின் சேகரிப்பு இடைநிறுத்தப்பட்டது. செத்தெம்பரில் இது திரும்பவும் மீள விதிக்கப்பட்டு வரிக்குரிய விலை மட்டம் ரூ. 60 இற்கு உயர்த்தப்பட்டு வரிக்குரிய மட்டத்திற்கு மேல் 50 சதவீத வரி கிலோக்கிறாமிற்கு ரூ. 15 இற்குக் கூடாதவாறு விதிக்கப் பட்டது. இத் திருத்தங்களுக்கும் மேலாகத் தேயிலை ஏற்றுமதித் தீர்வை அறவீடு கிலோக்கிறாமிற்கு ரூ. 1.50 இலிருந்து, 1989 ஒற்றோபரில் ரூ. 2.00 இற்கு அதிகரிக்கப்பட்டது. இறக்குமதித் தீர்வைகளைப் பொறுத்தமட்டில் மது, கருவாடு சிகரெட், சீமெந்து, உந்து ஊர்திகள் ஆகிய விடயங்கட்கு இவ் வருடத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டன.

**இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடு**

பிலியாட் மேசைகள், சுழலும் சூதாட்ட மேசைகள் போன்ற விளையாட்டுக் களுக்கான சில கருவிகளின் இறக்குமதி உரிமக் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வரப்பட்ட வேளையில் பொலித்தீன் உற்பத்திகள், செயற்கைப் பிசின் என்பவற்றின் இறக்குமதி மீளாய்விற்குரிய ஆண்டில் தாராளமாக்கப்பட்டது. ஏற்றுமதி நடைமுறையைப் பொறுத்தமட்டில் 1989 இல் எதுவித மாற்றமும் இருக்கவில்லை.

**வர்த்தக ஒழுங்குகள்**

1989 இல் பன்னாட்டு வர்த்தக ஒழுங்குகள் துறையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் எதுவும் இருக்கவில்லை.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய அமைப்பின் மீதான உடன்படிக்கை 1989 ஏப்பிறலில் நடைமுறைக்கு வந்தது. வர்த்தக முன்னுரிமைகளைப் பரிமாற்றம் செய்வதினூடாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளிடையே வர்த்தகத்தை மேம்படுத்துவதே வர்த்தக முன்னுரிமைகளின் உலகளாவிய அமைப்பின் முதன்மைக் குறிக்கோளாகும். பாங்கொக் உடன்படிக்கையைப் பொறுத்தவரையில் பேச்சுவார்த்தைகளின் இரண்டாவது சுற்றின் நான்காவது கூட்டத் தொடரை நடத்துவதற்கான முயற்சிகள் 1989 இல் மேற்கொள்ளப்பட்டன. எனினும் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட குறிப்பிட்ட காரணங்களின் விளைவாக இது கைகூடாமல் போயிற்று.

பன்னாட்டு பண்ட உடன்படிக்கைகளைக் கருத்திற் கொள்கையில், 1988 திசெம்பரில் தற்காலிகமாக நடைமுறைக்கு வந்த பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை 2 ஏற்றுமதி இறக்குமதி நாடுகளிலிருந்தான தேவைப்பாடுகளில் 80 சதவீதமானதை உறுதிப்படுத்தியதன்பேரில் 1989 ஏப்பிறலில் நிறைவு பெற்றது. எனினும், இலங்கை இவ்வுடன்படிக்கையில் தனது உறுப்புரிமை பற்றி 1989 இறுதிவரை தீர்மானமெதையும் எடுக்கவில்லை. புதிய உடன்படிக்கை பன்னாட்டு இயற்கை இறப்பர் உடன்படிக்கை1 இலும் பார்க்கக் கூடியளவிற்கு சந்தை சார்ந்த தன்மைகளை—குறிப்பாக விலைச் சீராக்கப் பொறிமுறையுடன் தொடர்புள்ள விடயங்களிலேயே கரிசனை கொண்டிருந்தபோதிலும், முன்னைய உடன்படிக்கையை ஒத்ததாக இப்புதிய உடன்படிக்கையும் விலை உறுதிப்பாட்டுத் தன்மையையே அடிப்படையாகக் கொண்டிருந்தது. எடுத்துரைக்கப்பட்ட பன்னாட்டுத் தேயிலை உடன்படிக்கையைப் பொறுத்தவரை, இவ்வாண்டுக் காலத்தில் உணவு வேளாண்மை அமைப்பின் ஆதரவின்கீழ்த் தேயிலை உற்பத்தி மற்றும் நுகர்வு நாடுகளிடையே முறைசாரா ஆலோசனைகள் இடம்பெற்றபோதும் 1989 இலும் கூடக் கணிசமான முன்னேற்றங்களெதுவும் ஏற்படவில்லை. 1983 இல் செய்யப்பட்ட பன்னாட்டுக் கோப்பி உடன்படிக்கை 1989 செத்தெம்பரில் முடிவடைந்தது. எனினும் புதிய உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தைக்குப் போதுமான நேரத்தை ஒதுக்கும் பொருட்டு இவ்வுடன்படிக்கை 1989 ஒற்றோபரிலிருந்து மேலும் இரண்டாண்டிற்கு நீடிக்கப்பட்டது. 1989 இல் நீடிக்கப்பட்ட உடன்படிக்கையில் இலங்கையும் கையெழுத்திட்டது. உடன்படிக்கை நீடிக்கப்படுவதற்கு முன்னர் 1989 யூலையில் அனுமதிப் பங்கு ஒதுக்கீடு இடை நிறுத்தப்பட்டதுடன் ஆண்டின் எஞ்சிய காலப்பகுதியின் ஏற்றுமதி தொடர்ந்தும் அனுமதிப் பங்கு அற்றதாக விளங்கியது.

## துறைமுகச் சரக்கும் கப்பற் கட்டண வீதங்களும்

### துறைமுகங்களில் கையாளப்பட்ட சரக்குகள்

இலங்கையின் மூன்று முக்கிய துறைமுகங்களிலும் அதாவது கொழும்பு, காலி, திருகோணமலையில் கையாளப்பட்டஉலர் சரக்குகளின் மொத்தத்தொகை 1988 இன் 10,465,844 மெற்றிக் தொன்களிலிருந்து 1989 இல் 10,074,761 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இவற்றில் கொழும்பு 8,676,882 மெற்றிக் தொன்கள் அல்லது மூன்று துறைமுகங்களிலும் கையாளப்பட்ட உலர் சரக்குகளின் மொத்த அளவில் 86 சதவீதத்தைக் கையாண்டு முதன்மைத் துறைமுகமாகத் தொடர்ந்தும் விளங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொழும்புத் துறைமுகத்தால் கையாளப்பட்ட உலர் சரக்குகளின் அளவு 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருக்கையில், காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் கையாளப்பட்ட உலர் சரக்குகளின் அளவு முறையே 23 சதவீதத்தாலும் 36 சதவீதத்தாலும் அதிகரித்தன.

ஆய்விற்குரிய ஆண்டில், மூன்று முதன்மைத் துறைமுகங்களினாலும் கையாளப்பட்ட உலர் சரக்கு இறக்குமதிகளின் அளவு 1988 இன் 6,524,359 மெற்றிக் தொன்களிலிருந்து 1989 இல் 6,291,527 மெற்றிக் தொன்களுக்கு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. கொழும்புத் துறைமுகத்தில் கையாளப்பட்ட ஈரச் சரக்குகளின் அளவு 1988 இன் 2,050,716 மெற்றிக் தொன்களிலிருந்து 1989 இல் 1,752,023 மெற்றிக் தொன்களுக்கு 17 சதவீதத்தால் வீழ்ச்சி

யடைந்தது. கீழுள்ள அட்டவணை 1988 இலும் 1989 இலும் மூன்று முக்கிய துறைமுகங்களினாலும் கையாளப்பட்ட இறக்குமதி ஏற்றுமதிச் சரக்குகளின் (உலர்) பகுப்பைத் தருகின்றது.

இலங்கைத் துறைமுகங்களில் கையாளப்பட்ட (உலர்ந்த) சரக்குகளின்

இறக்குமதிகள் ஏற்றுமதிகள் 1988—1989

மெற்றிக் தொன்களில்

| துறைமுகம் | இறக்குமதிகள் 1988 | இறக்குமதிகள் 1989 | ஏற்றுமதிகள் 1988 | ஏற்றுமதிகள் 1989 | மொத்தம் 1988 | மொத்தம் 1989 |
|---|---|---|---|---|---|---|
| கொழும்பு ... | 5,763,678 | 5,291,910 | 3,654,984 | 3,384,972 | 9,418,662 | 8,676,882 |
| காலி ... | 173,664 | 212,332 | 11 | 1,387 | 173,675 | 213,719 |
| திருகோணமலை ... | 587,017 | 787,285 | 286,490 | 396,875 | 873,507 | 1,184,160 |
| மொத்தம் ... | 6,524,359 | 6,291,527 | 3,941,485 | 3,783,234 | 10,465,844 | 10,074,761 |

மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை.

சுற்றுலா

1983 இல் திடீரெனத் தோன்றிய உள்நாட்டுக் குழப்பங்களைத் தொடர்ந்து கீழ்நோக்கிய போக்கைக் கொண்டிருந்த சுற்றுலாக் கைத்தொழில் 1989 இல் சிறிதளவு முன்னேற்றத்தைக் காட்டியது. இம் முன்னேற்றமானது முழுமையாக ஆண்டின் இறுதி இரு மாதங்களிலேயே பிரதிபலிக்கப்பட்டது. இதன் விளைவாக, முன்னைய ஆண்டின் ஒத்த எண்ணுடன் ஒப்பிடுகையில் 1989 செத்தெம்பர் இறுதியில் 124,708 இற்கு 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த மொத்தச் சுற்றுலா வருகைகள் 1989 இறுதியில் 184,732 இற்கு 1 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும் பின்னையது 1982 இல் பதிவு செய்யப்பட்ட சுற்றுலா வருகைகளின் உச்ச மட்டமான 407,230 ஐவிட 55 சதவீதம் குறைவானதாகும்.

1989 இல் மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்கா தவிர்ந்த எல்லா ஏனைய பிரதேசங்களிலிருந்தான சுற்றுலா வருகைகள் அதிகரித்தன. தொடர்ந்து முதன்மைச் சந்தையாக விளங்கிவரும் மேற்கு ஐரோப்பாவிலிருந்தான வருகைகள் மொத்த வருகைகளில் 55 சதவீதத்திற்கு வகைகூறியபோதும், இது 8 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இரண்டாவது பெரும் சந்தையான ஆசியாவிலிருந்தான வருகைகள், கொங்கொங்கிலிருந்தான வருகைகளில் ஏற்பட்ட 10 மடங்கு அதிகரிப்புக் காரணமாக 22 சதவீதத்தால் அதிகரித்தன. கிழக்கு ஐரோப்பாவிலிருந்தான சுற்றுலா வருகைகளும் 34 சதவீதத்தால் அதிகரித்திருக்கையில், அவுத்திரலாசியாவிலிருந்தான வருகைகள் சிறிதளவால் அதிகரித்தன. வட அமெரிக்காவிலிருந்தான வருகைகள் 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

## அட்டவணை 1.43

### சுற்றுலா வருகைகளும் வருவாய்களும் 1985—1989

| விடயம் | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|
| 1. பிரதேச ரீதியிலான வருகைகள்* | | | | | |
| 1.1 மேற்கு ஐரோப்பா .. | 153,004 | 143,022 | 121,112 | 111,426 | 101,910 |
| 1.2 ஆசியா .. | 79,056 | 66,150 | 43,462 | 53,712 | 65,428 |
| 1.3 வட அமெரிக்கா .. | 10,358 | 9,232 | 7,166 | 6,534 | 5,844 |
| 1.4 கிழக்கு ஐரோப்பா .. | 3,080 | 2,764 | 3,160 | 3,386 | 4,544 |
| 1.5 அவுத்திரலாசியா .. | 8,090 | 5,788 | 4,448 | 3,992 | 4,020 |
| 1.6 ஏனையவைகள் .. | 3,858 | 3,150 | 3,272 | 3,612 | 2,986 |
| 1.7 மொத்தம் .. | 257,456 | 230,106 | 182,620 | 182,662 | 184,732 |
| 1.8 வளர்ச்சி வீதம் ... | --19.0 | —10.6 | —20.6 | + 0.02 | +1.1 |
| 2. வேறுபட்ட பயண வழிகள் தொடர்பான முக்கியத்துவம் (சதவீதப் பங்குகள்) | | | | | |
| 2.1 மொத்த வான் வழி ... | 99.9 | 99.9 | 99.9 | 99.9 | 99.9 |
| 2.1.1 நாடுகளுக்கிடையிலான பறப்புக்கள் ... | 40.9 | 57.3 | 55.4 | 54.9 | 63.4 |
| 2.1.2 பிரதேசங்களுக்கிடையிலான பறப்புக்கள் ... | 39.7 | 22.4 | 20.0 | 25.3 | 23.2 |
| 2.1.3 ஒப்பந்த அடிப்படையிலான பறப்புக்கள் .. | 19.3 | 20.2 | 24.5 | 19.7 | 13.3 |
| 2.2 மொத்த கடல் வழி | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 2.2.1 பயணிகள் கப்பல்கள் (கொழும்பு) ... | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 2.2.2 படகுப் பயணப் பாதை (தலைமன்னார்) ... | — | — | — | — | — |
| 3. வருகைதந்த சுற்றுலா பயணிகள் நோக்கங்களின் அடிப்படையிலான பங்கீடு (சதவீத பங்குகள்) | | | | | |
| 3.1 இன்ப நுகர்வு ... | 90.9 | 93.9 | 89.1 | 90.4 | 92.1 |
| 3.2 வியாபாரம் .. | 7.4 | 4.4 | 8.5 | 7.5 | 6.4 |
| 3.3 நண்பர்களிடமும் உறவினர்களிடமும் வருகை தருவோர் ... | 1.0 | 0.8 | 1.3 | 0.6 | 0.3 |
| 3.4 சமயமும் பண்பாடும் ... | 0.1 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 3.5 ஏனையவை ... | 0.6 | 0.8 | 1.0 | 1.4 | 1.1 |
| 4. பயணி இரவுகள் ('000) | 2,365 | 2,513 | 2,414 | 2,305 | 1,970 |
| 5. சுற்றுலாப் பெறுகைகள் | | | | | |
| 5.1 ரூ. ப. இ. .. | 2,233.3 | 2,300.1 | 2,415.2 | 2,438.4 | 2,749.5** |
| 5.2 ப. இ. ஐ. அ. டொலர்கள் .. | 82.2 | 82.1 | 82.0 | 76.7 | 76.3 |
| 5.3 ப. இ. சி. எ. உ. .. | 80.8 | 69.9 | 63.4 | 57.0 | 59.5 |
| 6. சராசரியாகத் தங்கும் காலப் பகுதி (இரவுகளின் எண்ணிக்கை) .. | 9.2 | 10.9 | 13.2 | 12.6 | 10.7 |
| 7. நாளொன்றுக்கான ஒரு சுற்றுலாப் பயணியின் சராசரி செலவு | | | | | |
| 7.1 ரூபா ... | 848.71 | 836.01 | 1,001.12 | 1,058.0 | 1,396.0** |
| 7.2 ஐ. அ. டொலர் ... | 34.08 | 32.07 | 34.10 | 33.26 | 38.72 |
| 7.3 சி. எ. உ. ... | 30.74 | 25.39 | 26.27 | 24.74 | 30.22 |

மூலம்: இலங்கைச் சுற்றுலா சபை

* "இன்பப் பயணிகளின்" வருகைகளை உள்ளடக்கவில்லை.

** மதிப்பிடப்பட்டவை.

முன்போலவே, இலங்கைக்கான சுற்றுலாப் பயணத்தின் பிரதான நோக்கம் களியாட்டமாகவே தொடர்ந்தும் விளங்கியதுடன் 1989 இல் மொத்த வருகைகளின் 92 சதவீதத்திற்கு வகை கூறியது. இது 1988 இன் 90 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கது. வியாபாரம், அலுவல்சார் நோக்கங்கட்கான வருகைகள் 6 சதவீதத்திற்கு வகை கூறுகையில், சமூக சமய, கலாச்சார, கல்வி போன்ற ஏனைய நோக்கங்களுக்கான வருகைகள் எஞ்சிய 2 சதவீதத்திற்கு வகை கூறின.

இலங்கைச் சுற்றுலாச் சபையின்படி, 1989 இல் சுற்றுலாவிலிருந்தான மதிப்பிடப்பட்ட மொத்த வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் சிஎஉ 670 இலட்சமாக (ரூ. 31,000 இலட்சம்) விளங்கி முன்னைய ஆண்டைவிட 18 சதவீத அதிகரிப்பைக் (ரூபா நியதிகளில் 27 சதவீதம்) காட்டியது. 1982 இல் பதிவு செய்யப்பட்ட சிஎஉ 1,320 இலட்சம் கொண்ட செலாவணி வருவாய்களின் உயர்ந்த மட்டத்துடன் ஒப்பிடுகையில் 1989 இல் இவ்வருவாய்கள் 49 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. சுற்றுலாப் பயணி ஒருவரின் ஒரு நாளைக்கான சராசரிச் செலவு 1988 இன் சிஎஉ 25 (ரூ. 1,058) இலிருந்து 1989 இல் சிஎஉ 30 (ரூ. 1,396) இற்கு 22 சதவீதத்தால் (ரூபா நியதியில்32 சதவீதம்) அதிகரித்தது.

சுற்றுலாத் துறையினால் வழங்கப்பட்ட மொத்தத் தொழில்நிலை முன்னைய ஆண்டின் அதே மட்டமான 48,000 இலேயே கிட்டத்தட்டத் தொடர்ந்திருந்தது. இத்தொகையில் கிட்டத்தட்ட 20,000 பேர் நேரடியாக இத்துறையில் தொழில்பெற்ற வேளையில் 28,000 பேர் பலதரப்பட்ட துணைத் துறைகளிலும் வேலை பெற்றனர்.

தரமிடப்பட்ட தங்குமிடவகையில் தொழிற்பட்ட சுற்றுலா விடுதி கூறுகளின் எண்ணிக்கை 1988 இன் 128 இலிருந்து 1989 இல் 118 இற்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதனால், தரமிடப்பட்ட தங்குமிடவகையில் உள்ள மொத்த அறைகள் 1988 இன் 9,977 இலிருந்து 1989 இல் 9,459 இற்கு 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்விரு ஆண்டுகளுக்கும் இடையில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 19,432 இலிருந்து 18,464 இற்கு வீழ்ச்சியடைந்தது. தரமிடப்பட்ட சுற்றுலா விடுதிகளில் அறைகளில் தங்கும் சராசரி வீதம் 1988 இன் 32.1 சதவீதத்திலிருந்து 1989 இல் 31.0 சதவீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமைக்குத் தென்கரை, மலைநாடு பிரதேசங்கள் என்பவற்றின் குறைந்த பயன்பாடே காரணமாகும். துணைத் தங்குமிடத்துறையில் கூறுகளின் எண்ணிக்கை 1988 இன் 85 இலிருந்து 1989 இல் 80 இற்கு வீழ்ச்சியடைந்து மொத்த அறைகளின் எண்ணிக்கையை 936 இலிருந்து 901 இற்குக் குறைத்தது.

1983 ஆம் ஆண்டின் பிற்பகுதியிலிருந்து சுற்றுலாத்துறைக்கு அரசினால் வழங்கப்பட்ட நிவாரண வழிமுறைகள் 1989 இலும் தொடர்ந்தும் நடைமுறையில் இருந்தன. இவ்வழிமுறைகள் கடன்களின் 100 சதவீதமான மீள் அட்டவணைப்படுத்தப்பட்டு 1989 மாச்சு வரை நீடிக்கப்பட்ட கடன்களை மீளச் செலுத்துவதற்கான சட்டரீதியான சகல அவகாசத்தையும் பாதிக்கப்பட்ட சுற்றுலா விடுதிகளுள் தொழிற்படு மூலதனத் தேவைகளை ஈடுசெய்வதற்கான வட்டியற்ற கடன் வசதிகள் என்பவற்றையும் உள்ளடக்கியிருந்தன.